**ARTICLE 26 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00027**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 151–157
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# பாமாவின் படைப்புகளில் தலித்திய மொழி

**ஷகிலாலோகநாயகி க[1,*], முனைவர் . நித்தியகல்யாணி சு[2]**

[1]முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் பதிவு எண் : 19211204022021 தமிழ்த்துறை ஆய்வுமையம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி இணைவுபெற்றது., India
[2]உதவிப்பேராசிரியர் (சுயநிதிப்பிரிவு) தமிழ்த்துறை ஆய்வுமையம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி இணைவுபெற்றது., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** ஷகிலாலோகநாயகி க — kslogaumi@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

எல்லா ஊடகங்களையும் விட மொழியானது மனிதனின் அன்றாட வாழ்க்கையில் முதன்மையான ஒன்றாக இருக்கிறது. மொழி என்பது, ஒருவர் அறிந்துள்ள வார்த்தைகளைத் தான் வாழும் இடச்சூழலுக்கேற்ப பிறருடன் பகிர்ந்து கொள்வது என்பதாகும். தமிழ் இலக்கிய மொழி நடையில் தலித் இலக்கிய வரவால், புதியதாய் ஒரு வடிவம் தோன்றியுள்ளது. தலித் இலக்கியம் என்பதே எதிர்ப்பிலக்கியம் என்று கூறப்படுகிறது. ஒரு படைப்பிற்கு இலக்கியத்தகுதி வழங்குவதில் மொழிநடை இன்றியமையாப் பங்காற்றுகிறது. இன்று தலித் இலக்கியங்கள் தங்களுக்கென்று புதிய மொழிநடையை உருவாக்கிக் கொண்டுள்ளது. எளிமையும், சுவையும், தெளிவும், சுருக்கமும் ஒருங்கே காணப்பட்டு எல்லாருக்கும் புரியும் வகையில் அமையும் நடையே சிறப்பான நடையாகும். ஒரு படைப்பாளனின் தனித்தன்மையைக் காட்டுவது அவனது படைப்பின் மொழி நடையேயாகும். இத்தகைய இயல்பின்படி சமகால படைப்பாளர் பாமா, தன்னுடைய படைப்புக்களில் கையாளும் மொழிநடையைக் குறித்து இக்கட்டுரையில் ஆராயமுடிகின்றது.

**Keywords / திறவுச் சொற்கள்:** தலித் இலக்கியம்; எதிர்ப்பிலக்கியம்; படைப்பு மொழி

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** க, ஷ., & சு, மு. . நி. (2026). பாமாவின் படைப்புகளில் தலித்திய மொழி. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

ஒரு படைப்புக்குரிய மொழி நடையானது வாசகர்களுக்கு எளியமுறையில் சென்று சேர்வதாக இருக்க வேண்டும். இலக்கியத்தில் சொற்கள் பயணிக்கின்ற முறையையே மொழிநடை என்கிறோம். மனிதன் வாழும் வாழ்க்கை முறை, அவன் வாழுகின்ற நிலத்தியல்பு, தட்பவெப்ப, இயற்கைச் சூழலுக்கேற்ப அமையும் மொழியும், சூழலுக்கேற்ற குறியீடுகளை உள்ளடக்கிய சொற்கள் ஆகியவை மூலமும், செய்யும் தொழிலை ஒட்டியும், பயன்படுத்தும் பொருட்களை ஒட்டியும் மொழிநடை அமையும். அவ்வாறு அமைகின்ற மொழிநடையானது படைப்பாளர் பாமாவின் படைப்புகளில் தலித்திய மொழிநடையாக எவ்வாறு அமைந்தது என்பதை விளக்கமாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## மொழிநடை விளக்கம்

ஒரு படைப்பிற்கு இலக்கியத் தகுதி வழங்குவதில் "மொழிநடை" என்பது இன்றியமையாத பங்காற்றுகிறது. நடை என்பதற்கு ஆங்கில அகராதி "ளுவலடந" என்ற சொல்லைத் தருகிறது. "ஓர் ஆசிரியனின் இயல்பையும், சமுதாயப் பார்வையினையும் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அவனை அடையாளம் கண்டுகொள்ளும் வகையில் அமையும் மொழிப்புலப்பாட்டுப் பாங்கே நடை ஆகும்"1 என்று குறிப்பிடுகிறார். மேலும் ஒவ்வொரு சாதியும் தனக்கென ஒரு மொழிநடையை உருவாக்கி வைத்திருக்கிறது. மொழி என்பது அனுபவங்களில் இருந்து உருவாகி வரவேண்டும்.

## மொழி குறித்து மொழி நூலாரின் கருத்துக்கள்

மொழி என்பது உலக மாந்தர் அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகும். தமது உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளியிட வேண்டுமென்ற துடிப்பும், பிறர் உணர்வுகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் ஆகிய இவற்றின் அடிப்படையில்தான் மொழி தோன்றியிருக்க வேண்டும். இத்தகைய மொழியைப் பற்றிய மொழி நூலாரின் கருத்துக்களை அறிவது அவசியமாகின்றது.

### மு.வரதராசன்

**"மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை: அந்த மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது"**2 என்று அறிவை வளர்த்து அறியாமையைப் போக்கும் கருவியாக மொழி விளங்குகிறது என்று மொழிநூல் அறிஞர் மு.வ.கூறுகிறார்.

மேலும் **"சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக உள்ள மொழி அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது. சமுதாயத்தால் வளர்ந்து சமுதாயத்தை வளர்த்து வருகிறது"**3 சமுதாயத்தையும் வளர்த்து தன்னையும் வளர்த்துக் கொள்ளும் தன்மையுடையதாக மொழி இருப்பது குறித்துக் கூறுகிறார்.

### ஞா.தேவநேயன்

**"மொழியாவது மக்கள்தம் கருத்தை ஒருவருக்கொருவர் வெளியிடுவதற்குக் கருவியாகும் ஒலித்தொகுதி"**4 கருவியாகவும் அதேபோல் பல்வேறு குறிப்புகளைப் பகிர்ந்தளிக்கும் ஒலியின் கூட்டமாகவும் உள்ளதாகத் தேவநேயன் கூறுகிறார்.

### பொன்.கோதண்டராமன்

**"மொழி பொதுவாகக் கருத்து வெளிப்பாட்டிற்குரிய ஒரு கருவி என்று கூறுவார்கள். மொழி கருத்து வெளிப்பாட்டிற்கு மட்டும் உரிய கருவியல்ல. உணர்ச்சி வெளிப்பாட்டிற்குரிய கருவியுமாகும்"**5 என்றும் மொழியானது கருத்தை வெளிப்படுத்துவதோடு, உணர்ச்சிகளை வெளிக் கொண்டுவர உதவுவதாகவும் கூறுகிறார்.

இவ்வாறு மொழிநூலாரின் பார்வையில் மொழியானது, கருத்துக்களை வெளிப்படுத்தவும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும்

மாந்தர்களிடையே ஒரு சாதனமாகப் பயன்பட்டு வந்திருப்பதை அறிய முடிகிறது.

## மொழி பற்றிய சிந்தனை

அடிப்படையில் மொழி ஒரு தொடர்பு ஊடகம் என்று வரையறுக்கப்படுகின்றது. எந்தவொரு மனிதரும் சமூகத்தில் தனித்து வாழ்ந்திட முடியாது. ஒவ்வொரு மனிதரும் பிற மனிதரோடு ஏதாவது ஒரு தேவையின் பொருட்டுச் சேர்ந்து வாழ வேண்டிய அவசியம் இருக்கிறது. அதன் பொருட்டே மொழிதல் நிகழ்கிறது. ஆகவே, மொழிதல் எனும் நிகழ்வினைக்கு மனிதர்கள்தான் காரணமாக அமைகிறார்கள். இந்நிலையில் **“தன்னைச் சார்ந்த சமுதாயத்துடன் உறவாட, தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள, தன் சமுதாயத்துடன் தன்னைப் பிணைத்துக்கொண்டு, ஒரே சமூகமாக இயங்கத் துணையாகும் கருவியாக மொழி அமைகிறது”**6 என்று சு.இன்னாசி குறிப்பிடுவதாக, மகாராசன் கூறுகிறார்.

மேலும் “சமூகமாக, குழுக்களாக, கூட்டமாக வாழும் மனிதஇனத்தின் நிலை, முன்னேற்றம், வரலாறு, பண்பாடு, வாழ்வியல், சமுதாயநிலை, பொருளாதாரநிலை, சமய நிலை, நம்பிக்கைகள் போன்ற பலவற்றை அவர்கள் பயன்படுத்தும் மொழி பதிவு செய்து வெளிப்படுத்துகின்றது” என்று அன்னிதாமசு குறிப்பிடுவதாக மகாராசன் கூறுகிறார்.

இதனால் ஒரு குழு அல்லது சமூகத்திற்கும் மொழிக்கும் உள்ள மிக நெருக்கமான தொடர்பும் உறவும் நுட்பமான தன்மையில் அமைந்திருக்கின்றன. அதோடு குழுப்பேச்சு நிகழ்வாக மட்டுமே மொழிதல் அமைவதில்லை. அம்மொழிதல் நிகழ்வு ஒரு சமூகச் செயலாகவும் அமைகின்றது.

## மொழியும் பண்பாடும்

நம் எண்ணங்களை, உணர்வுகளை தேவைகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கு மொழியானது பயன்படுகிறது. ஆயினும் ஒரு குறிப்பிட்ட சமூக, அரசியல் சூழலில் மொழி இதற்குமேல் பல பரிமாணங்களைப் பெற்று, அது ஒரு பண்பாட்டு அரசியல் ஆயுதமாக மாறி விடுகின்றது. அதிகாரத்தின் சின்னமாகவும் அடிமைத்தனத்தின் வெளிப்பாடாகவும் ஆகிவிடுகின்றது. மொழி, பண்பாட்டின் ஒரு அம்சமாக இருக்கும் அதேவேளையில் பண்பாட்டின் ஊடகமாகவும் உள்ளது. அதாவது ஒருமொழிச் சமூகத்தினரின் பண்பாடு அவர்களின் மொழியில் பிரதிபலிக்கின்றது அல்லது வெளிப்படுகின்றது. அவ்வகையில் மொழியையும் பண்பாட்டையும் பிரிக்க முடியாது.

**“எந்த மொழியுமே அழகானதுதான். அது அழகாயிருப்பதற்குக் காரணம், அது மனித மனதைப் பிரதிபலிப்பதால்தான். சமுதாய வாழ்வின் ஒரு முக்கியப் பகுதி மொழி. எனவே எல்லாப் பேச்சுமொழிகளும் இலக்கியத்தின் ஒரு பகுதியே. பயன்படுத்தப்பட்ட மொழிதான் இலக்கியத்தின் தனிப்பட்ட மொழி என்பது உண்மையல்ல. சமூகம் மொழிகளாலும் சாதிகளாலும் பிரிக்கப் பட்டிருக்கிறது ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பட்ட அனுபவங்கள் இருக்கின்றன. அவை வரவேற்கப்பட வேண்டியவையே”**7 என்று

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

ஊர்மிளா பவார் கூறுகிறார். எனவே மொழியானது ஒரு சமூகத்தையும், அதன் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் கருவியாக விளங்குகிறது என்று கூறலாம்.

சாதிக்கேற்ற மொழி

**“ஒரு குறிப்பிட்ட சாதியினர் தங்களுக்குள் இருக்கக்கூடிய சாதிய அடக்குமுறையை, ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக மொழியின் தன்மை அமைந்திருக்கிறது. உயர் சாதிக்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்களை அவமானப்படுத்துவதாக மொழிநடை அமைந்துள்ளது. இத்தகைய மொழிநடை சாதிய மொழிநடை என்பதாகும்”8** என்று கூறப்பட்டுள்ளது.

சாமி, அய்யா, ஆண்டே, நாச்சியா, நைனா என அழைக்கும் ஒரு தலித்தின் குரல் ஒலிப்புமுறை தலித் என அடையாளம் காட்டும். சாதிக்கேற்ற மொழி கையாளப்பட்டிருப்பதை இங்கு நாம் நினைத்துப் பார்க்கமுடிகிறது. திறந்த வெளியில் உழைக்கும் இவர்களது உச்சரிப்பில் இழுவைத் தன்மையும், ஒலிப்பு முறையில் உரத்த தன்மையும் வெளிப்படுத்துவது இயல்பாகிறது.

தலித் மக்களுக்கான மொழிநடை, தனித்த தன்மை உடையது. பேச்சு வழக்கு மொழியை ஆதாரமாகக் கொண்டே படைப்புக்களில் பாத்திரங்களின் மொழிநடை அமைந்துள்ளது. திறந்த வெளிகளில் வாழ்க்கைச் சூழல் இருப்பதனால், இயல்பாக உரத்து ஒலிக்கும் குரல் வளத்தினைத் தலித் மக்கள் பெற்றுள்ளனர். பல நேரங்களில் மேலாதிக்கச் சாதியினரின் அதிகாரங்களுக்குப் பயந்தும, பணிந்தும் வாழ வேண்டியிருப்பதால், இவர்களின் உடல்களும் குரல்களும் ஒடுங்கி ஒலிக்கும் இயல்புடையவைகளாகின்றன.

## தலித்திய மொழிநடை

இன்றைய இலக்கியங்களில் பேச்சு மொழிநடையின்றி, இலக்கிய மொழிநடை படைக்கப் பட்டு வருகின்றன. இதனைத் தகர்ப்பது தான் தலித்திய மொழிநடை. அசிங்கம், அருவெறுக்கத் தக்கது, அவமானம், அபச்சாரம் என்று எதை ஆதிக்கச் சாதியினர் கருதுகின்றார்களோ, அதனை இலக்கியங்களில் எழுதுவது தான் தலித்திய மொழிநடை. ஆதிக்க சாதியினரை எதிர்த்துப் பேசுவது, அவர்களின் வாழ்வையும் கேலியாகப் பேசுவதுதான் தலித் மொழிநடையாகும். இலக்கியங்கள் வாயிலாக மொழிநடைக்கு எதிராகப் புதிய நடையை எழுதுவது தான் தலித்திய மொழிநடையாகும். **“படைப்பாளனுக்கே உரிய புதிய அனுபவத்தை அல்லது உணர்வை வெளிப்படுத்த தன்னகத்தே உறைந்துள்ள வார்த்தைத் தொகுதியிலிருந்து சரியான சொல்லைத் தெரிவு செய்து புதிய வார்த்தைகளை உருவாக்கியது தலித்திய மொழிநடை ஆகும்”9** என்று சிவகாமி கூறுகிறார்.

## பாமாவின் படைப்பில் மொழிப்பயன்பாடு

மொழியானது சமூகத்துடன் சேர்ந்து வளரக்கூடியது. பாமர மக்களின் பேச்சு மொழியும் இத்தன்மையதே. எனவே அந்தந்தக் காலகட்டங்களில் வழங்கிவரும் பேச்சுநடையைக் கையாண்டு இலக்கியம் படைக்கும்போதுதான் அஃது எதார்த்த இலக்கியமாகிறது.

தன்வரலாறுகளில் பேச்சுநடை கையாளப்பட்டிருப்பதால், எதார்த்த இலக்கியமாக அவை மிளிர்கின்றன. அந்த வகையில் பாமாவின் “கருக்கு” நாவலானது தன்வரலாறாக இருப்பதால், அது வாழ்வின் யதார்த்தங்களை அப்படியே பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. மலைக் காட்டிற்குள் சென்று, விறகு எடுக்கும்போது, தான் அனுபவித்த கொடுமை குறித்துப் பாமா கூறும்போது,

**“மலங்காட்டுக்குள்ள போறது அம்புட்டு சொலபமில்ல. ஆளோட ஆளா ஏறிப்போயி, அங்ன ஒன்னு இங்ன ஒன்னுமா கெடக்குற காஞ்ச வெறகுகளப் பெறக்கி, ஒன்னுசேதத்துக் கட்டணும். கட்டமுன்னாடி மூஞ்சிமொகற, கை, காலுன்னு பாக்காம முள்ளுக்காடு பெறாண்டிப் போடும். தோலெல்லாம் கீறி ரத்தம் வரும். அதெல்லாம் பாத்துக்கிட்டு நின்னா வெறகு பெறக்க முடியாது. முடியையும் கண்ட மாணிக்கப் புடுச்சு இழுத்து தலவலி மண்டயப் பௌக்கும். எங்குட்டு கூடித்தான் போறதுன்னு தெரியாது. அங்க என்ன ரோடா போட்டு வச்சிருக்கு? நாமதான் முட்டி, மொளஞ்சு, மோதி பொதருக்குள்ளயும், முள்ளுக்குள்ளயும் போகனும்”10** என்று கூறுகிறார்.

## படைப்பில் தலித் மொழிநடை

தன்னுடைய படைப்புக்களில் தாழ்த்தப்பட்ட மக்களிடம் காணப்படுகின்ற நிறை, குறைகளையும், சமூகத்தில் அவர்கள் பிற இனத்தவரால் நடத்தப்படும் விதத்தையும் தருகிறார். ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை விலங்குகள் என்றாவது தகர்த்து எறியப்படும். அந்தக்காலம் ரொம்ப தூரத்தில் இல்லை என்ற அவரின் கனவைப் பிரதிபலித்துக் காட்டுகிறார் பாமா.

படைப்புக்களில் ஆசிரியர் சார்ந்து வாழும் இடம், தலித மக்களின் பிரச்சினைகள் இவற்றைப் பற்றிக் கூறுவதால், அம்மக்கள் பேசுகின்ற மொழி நடையிலேயே உரையாடல்களை அமைத்துத் தருகிறார்.

“ஒரு தாத்தாவும் எருமையும்” என்ற கதையில் “மாலாண்டி” தாத்தாவுக்கும் “கந்தசாமிக்கும்" இடையே நடக்கும் உரையாடல் தலித் மக்களின் பேச்சுநடைக்கு உதாரணமாக அமைகிறது.

“உடும்பப் புடுச்சு என்னத்துக்கு தாத்தா?”

“அடப்படுவா, என்னத்துக்கின்னா கேக்க? உடும்புக்கறி தின்னா ஒடம்புக்கு நல்லதுடா. மருந்துப் பண்டங்கெணக்கா அது. அம்புட்டுச் சாமானியத்துல உடும்புக்கறி கெடைக்காது தெரியும்ல”.

**“போ. தாத்தா...போ. ஏங்கண்ணுல மட்டும் அது தட்டுப்பட்டுச்சுன்னு வையி. கல்லக் கொண்டி ஒற்றே இறுத்துதான். வெக்காளி விலுக்கு விலுக்குனு துள்ளிக்கிட்டுச் சாகும்”11** என்று கந்தசாமி ரொம்பச் சவுடாலாச் சொன்னான்.

தலித் மக்கள் எந்தெந்த வகையில் எல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவே அவர்களின் மொழிநடையில், தன் படைப்புக்களைப் படைத்துள்ளார் பாமா. அடிபட்டவன் எழுதும் மொழியில் வலியின் வேதனைகள் காணப்படுகிறது. அதனால் தலித் மொழி உயிரோட்டமுடையதாக அமைகிறது. தலித் அல்லாதோர் மொழியில் கதையும் அனுதாபமுமே மிகுந்திருக்கும். எனவே தான் தலித்துக்களின்

மொழியை, உறவுமுறைகளை, உறவுகளை, நம்பிக்கைகளை அதற்கான மதிப்பீடுகளை, அவர்கள் பயன்படுத்தும் வசைமொழிகளை உள்ளது உள்ளபடியே எடுத்துக்கூறும் போக்கு பாமாவிடம் காணப்படுகிறது.

“தாவணி” என்ற சிறுகதையில், ஐந்தாம் வகுப்பு முடித்த செல்லக்கிளி என்ற தன் மகளைக் குப்பாம்பட்டணத்துல இருக்கிற முதலாளியின் மகள் வீட்டிற்கு, படிப்பிற்கு மற்றும் வீட்டு வேலைக்கு என்று அனுப்பி வைத்தான் இருளப்பன். ஆனால் அங்கு முதலாளியின் மகள் செய்த கொடுமையின் காரணமாக செல்லக்கிளி இறக்க நேரிடுகிறது. இச்செய்தியைக் குப்பாம்பட்டணத்து மக்களின் பேச்சிலிருந்து இருளப்பன் அறிந்து கொள்ள நேரிடுகிறது.

> “காலைல கூட அந்தப் பிள்ள துணி தொவச்சதப் பாத்தேன். சாயங்காலம் மூனு மணிக்குள்ள கொன்னுட்டாளே பாவி.”
> “மருந்தக் கிருந்த குடுத்துக் கொன்னுட்டாளோ?“

“இல்ல இல்ல: மூனுமணிக்குள்ள மாவாட்டனும்னு சொல்லிட்டு டவுனுக்குப் போனாளாம். அந்தப் பிள்ள ஆட்டி முடிக்க நாலுக்கு மேல ஆச்சாம். அந்தாணிக்க சவுக்குக் கட்டையக் கொண்டு பெடதி;ல பாத்து போட்டுருக்கா, ஒரு போடு. அது படாத எடத்துல பட்டு அங்னகுள்ளயே பிள்ள விலுக்கு விலுக்குன்னு துள்ளிருச்சாம். வாயுல மொறைத் தள்ளவும் பயந்து போயி ஒப்புக்கு டாக்டருட்டப் போனாளாம். எடவழிலயே செத்துப் போச்சாம். அதான் ஒடனே வந்து பெணத்த எரிச்சுட்டாளாம்.

**அவுகய்யனும் மாமனும் வந்து பெணத்தக்கூட பாக்கலியே. இந்த வெசயந் தெருஞ்சவுகளுக்குப் பணத்தக் குடுத்துச் சரிக் கெட்டிட்டா. அந்தப் பிள்ளயோட தகப்பன் ஒரு அப்பிராணி. பாவம் வாயில்லாப் பூச்சியாப் போறான்”**12 என்று இருளப்பனின் மகள் செல்லக்கிளியின் மரணத்திற்கானக் காரணத்தைக் குப்பாம்பட்டணத்து மக்கள் கூறுவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## முடிவுரை

இவ்வாறு தலித்திலக்கியப் படைப்பாளியான பாமா, தான் அனுபவித்த கொடுமைகளையும், தனக்கு ஏற்பட்ட அவமானங்களையும் தன்னுடைய படைப்புக்களில் தன் மொழியிலேயே மறுஉருவாக்கம் செய்துள்ளார். மேலும் தன்னுடைய வலியையும் வேதனையையும் புனைவுகள் ஏதுமின்றி, அனுபவ ரீதியாக வெளிப்படுத்தியிருப்பது படிப்பவர்களிடத்தில் தலித் மக்கள் குறித்த ஒருவிதமான மாற்றுச் சிந்தனையை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. தலித் மக்களில் பெரியவர்கள் மட்டுமன்றி, தலித் இனச் சிறுவர், சிறுமிகளும் உயர்சாதியினரின் வன்கொடுமைகளுக்கு உயிர்ப் பலியாவதைப் பாமா தலித் மக்களின் பேச்சு நடையிலேயே வெளிப்படுத்தும்போது, உணர்வுப்பூர்வமாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்குப் பேச்சுமொழிநடை பெரிதும் உறுதுணையாக இருப்பதை அறிய முடிகிறது. அனுபவம் சார்ந்ததாக அமையும் இந்த மொழிநடையானது, மிகவும் யதார்த்த தன்மையை உள்ளடக்கியதாகவும் காணப்படுகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. ந.பிச்சமுத்து, மு.வ.வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம், ப.74.

2. மு.வரதராசன், மொழி வரலாறு, ப.1.
3. மேலது., ப.1
4. ஞா.தேவநேயப் பாவாணர், ஒப்பியல் மொழிநூல், ப.11.
5. பொன்.கோதண்டராமன், பொற்கோ கவிதைகள், ப.1
6. மகாராசன், பெண்மொழி இயங்கியல், ப.34.
7. காலச்சுவடு, ஏப்ரல்-ஜுன் 1995, ப.12.
8. ராஜ்கௌதமன், தலித்திய விமர்சனக் கட்டுரைகள், ப.248.
9. அ.சஜன், தலித்தியம் இயக்கமும் இலக்கியமும, 2004: பக்.91-92.
10. பாமா, தழும்புகள் காயங்களாகி, பக்.54-55.
11. பாமா, ஒரு தாத்தாவும் எருமையும், ப.40.
12. மேலது, ப.34.

## துணைநூற் பட்டியல் (References)

1. தழும்புகள் காயங்களாகி, 2004, பாமா, விடியல் பதிப்பகம், கோயமுத்தூர், இரண்டாம்பதிப்பு.
2. ஒரு தாத்தாவும் எருமையும், 2010, பாமா, விடியல் பதிப்பகம், கோயமுத்தூர், இரண்டாம்பதிப்பு.
3. தலித் அரசியல், 2002, விழி. பா. இதயவேந்தன், காவ்யா வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு.
4. பொற்கோ கவிதைகள், 1987, பொன்.கோதண்டராமன், தமிழன் நூலகம், சென்னை, முதற்பதிப்பு.
5. தலித்தியம் : இயக்கமும், இலக்கியமும் (தலித்திய கட்டுரைகள்), 2004, அ. சஜன், காலசகம் வெளியீடு, நாகர்கோவில், முதற்பதிப்பு.
6. ஒப்பியல் மொழிநூல், 1965, தேவநேயப் பாவாணர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு.
7. பெண் மொழி இயங்கியல், 2010, மகாராசன், தோழமை வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு.
8. மு.வ.வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம், 1988, ந. பிச்சமுத்து, சக்தி புத்தக நிலையம், சென்னை, முதற்பதிப்பு.
9. தலித்திய விமர்சனக் கட்டுரைகள், 2005, ராஜ்கௌதமன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு.

© 2026 ஷகிலாலோகநாயகி க, முனைவர் . நித்தியகல்யாணி சு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..